Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 7/2023
DEPOSITION OF ACCUSED SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | செல்வராஜ் | Calling: | விவசாயம் |
| Father's/Husband's Name: | முருககவுண்டர் | Religion: | |
| Village: | கொத்தகோட்டை | Age: | 55 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 30.06.2026 நேரம் : 02.41 PM

எ.த.சா.1 முதன்மை விசாரணை

ஆஜர் எதிரிகளை தெரியும். ஆனந்தன், அரவிந்தன், மோனிஷ் ஆகியோரை தெரியும். கடந்த 11.07.2021 ம் தேதி ஞாயிற்று கிழமை காலை 07.00 மணியளவில் சண்டை போடும் சத்தம் கேட்டது. அப்போது நான் வண்டியை நிறுத்திவிட்டு மணி என்பவரின் நிலத்திடம் முருங்கை மரத்தையும் எலும்மிச்சை மரத்தையும் ஆனந்தன், அரவிந்தன், மோனிஷ் ஆகியோர் வெட்டிக்கொண்டிருந்தார்கள். அப்போது தனலட்சுமி என்பவர் ஏன் எங்கள் நிலத்தில் உள்ள மரத்தை வெட்டுகிறீர்கள் என கேட்டார். அதற்கு அரவிந்தன் தனலட்சுமியை பார்த்து தேவடியா அப்படிதான் வெட்டுவேன் என கூறிக்கொண்டே கையால் நூக்கியபோது கீழே விழுந்துவிட்டார். அவரது கையில் இருந்த ராடால் கழுத்தை நெரித்தார். செடியை ஏன் வெட்டுகிறீர்கள் என கேட்டதற்கு ஆனந்தன் உங்களையும் அதுபோல் தான் வெட்டுவேன் என கூறினார். அவரது கையில் வைத்திருந்த வெட்டுகத்தியால் மணி என்பவரின் வலது கையை வெட்டிவிட்டார். அப்போது சிவலிங்கம் என்பவர் தடுக்க ஓடி வந்தார். அவரை மோனிஷ் என்பவர் மண் வெட்டியால் வலது கை மோதிர விரலில்

வெட்டிவிட்டார்.இரத்த காயம் ஏற்பட்டது. அப்போது வேல்முருகன் என்பவரை அரவிந்தன் இடது கை முட்டியின் மீதும் மார்பு மீதும் அடித்துவிட்டார். மணிக்கு ஏற்பட்ட இரத்தகாயத்தை பார்த்துவிட்டு அவர்கள் ஓடிவிட்டார்கள். அப்போது அவர்கள் கீழே விழுந்து எழுந்து ஓடினார்கள், அப்போது அவர்களுக்கு அடிப்பட்டது. எதிரிகள் யாரும் அவர்களை அடிக்கவில்லை. பிறகு அவர்கள் வண்டியில் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள். நான் சம்பவத்தின் போது என் வீட்டிற்கு செல்லவேண்டும் என்பதால் அந்த வழியில் சென்றேன். என் வீட்டிற்கும் அந்த வழியில் தான் செல்லவேண்டும்.

அரசு தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) செல்வராஜ்

SRIPATHI K

SRIPATHI K
2026.06.30
14:53:29
+0530